# நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு அளித்த சாட்சியம்

(தமிழ் மொழி பெயர்ப்பு)


வைத்திய கலாநிதி

பொன்னுத்துரை சிவபாலன்

M.B.B.S(Cey)M.C.G.P(SL)

தலைவர்

விழிப்படைந்த மக்கள் முன்னணி

077 6638427

# நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு அளித்த சாட்சியம்

(தமிழ் மொழிபெயர்ப்பு)


வைத்தியகலாநிதி

## பொன்னுத்துரை சிவபாலன்

M.B.B.S. (Cey), M.C.G.P. (SL).

தலைவர்

## விழிப்படைந்த மக்கள் முன்னணி

## தலைவர் அவர்களே மற்றும் அங்கத்தர்களே,

இங்கு வந்து வேறு சிலரின் சாட்சியங்களை முன்பு கேட்டுள்ளேன். இங்கு சுயமாக சாட்சியமளிக்க வருபவர்கள் மன அழுத்தமின்றி சாட்சியமளிக்க ஊக்கமளித்த உங்களை நான் மெச்சுகிறேன். நன்றி.

நான் டாக்டர் பொன்னுத்துரை சிவபாலன் ஒரு இலங்கையன் ஒரு இந்து, ஒரு தமிழன். நான் பேராதனை மருத்துவ கல்லூரியின் மேற்கத்திய வைத்திய பட்டதாரி. அரசாங்க சேவையிலிருந்து விலகி 1977ஆண்டு அச்சுவேலியில் எனது வைத்தியசாலையை ஆரம்பித்தேன். எனது தாய் நாட்டில் உள்ள பற்றினாலும், கடந்த 60 ஆண்டுகளாக நடந்த கொடிய நிகழ்வுகள் மீண்டும் நடப்பதை விரும்பாமையினாலும் இங்கு சாட்சியமளிக்க முன் வந்துள்ளேன். ஒரு வைத்தியனாகவும் இந்நாட்டின் பிரசையாகவும் இருப்பதால் நோய்களினாலும் அரசியல் சீர்கேடுகளினாலும் மக்களுக்கு ஏற்படும் வேதனைகளையும் மரணங்களையும் தடுப்பது எனது தலையாய கடமையாகும். மருத்துவக்கல்லூரியில் என்னுடன் படித்த தமிழ் சிங்கள மாணவர்களில் அநேகமானவர்கள் டாக்டர் தொழிலின் ஆரம்ப கட்டத்திலேயே நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர். நான் எமது மக்களுக்கு எமது தாய் நாட்டில் சேவை செய்யும் நோக்கத்தின் காரணமாக வெளியேறவில்லை.

நான் 8ம் வகுப்பில் படிக்கும்போது சமஷ்டி பற்றிவகுப்பு சங்கக்கூட்டத்தில் பேசினேன். அன்று தொட்டு நான் எமது அரசியலை அவதானித்து வந்தேன். கான்ஸாட்டையும் வாசித்து வந்தேன். சமஷ்டி கட்சிக்கு ஒரு நாளும் வாக்களிக்கவில்லை. ஏனென்றால் அதன் தலைவர்கள் கொள்கைக்கு விசுவாசமற்றவர்களென்பதை நான் உணர்ந்திருந்தேன். முன்னைய அரசாங்கங்கள் தமிழருக்கு

செய்த அநியாயங்கள் தமிழர் இந்நாட்டில் சுயமரியாதையாக வாழமுடியாது என்பதை எடுத்து காட்டியதனால் 1977 ஆண்டு தமிழ் ஈழக்கோரிக்கையை ஆதரித்து வாக்களித்தேன். தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தமிழ் மக்களை ஏமாற்றி தேர்தலை வெல்வதற்காக அக்கோரிக்கை முன்வைத்ததை நான் பின்பு உணர்ந்து கொண்டேன். முன்னாள் பாராளுமன்ற அங்கத்தவர்கள் தமிழ் ஈழம் சாத்தியமில்லை தேர்தலுக்காகவே அதைப் பாவித்தோமென்று ஒத்துக்கொண்டுள்ளனர்.

தமிழரசுக் கட்சியினர் 60 வருடங்களாக தமிழர் தாயகம் என்ற தாரகமந்திரத்தை ஓதி விட்டு "சிறிலங்கா ஒரு சிங்கள பௌத்த நாடு, தமிழ் மக்கள் சிறு பான்மையினர், அவர்கள் எங்கள் மக்கள், இங்கு வாழலாம், ஆனால் ஒன்றும் கேட்கமுடியாது" என்று சொன்ன அபேட்சகருக்கு ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கும்படி தமிழ் மக்களை கேட்டனர். அதை என்னால் ஏற்க முடியாது போகவே தமிழரசு கட்சியினரது கபடத்தனத்தை தமிழ் மக்களுக்கும் வெளி உலகிற்கும் எடுத்துக்கூறும் நோக்கத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு சுயேட்சைக்குழுவிற்கு தலைமை தாங்கி 2010 ஆண்டு பொதுதேர்தலில் பங்குபற்றினேன். தமிழ் தேசிய கூட்டமைப்பை சேர்ந்தவர்கள் தமது வாக்குகளை பிரிப்பதற்காக ஜனாதிபதி எமக்கு பணம் தந்து களம் இறக்கி உள்ளார் என்று தமது குணத்திற்கேற்ப கதையை கட்டிவிட்டனர். எதையும் நம்பும் தமிழ் மக்கள் அதையும் நம்பினர். எனக்கு உத்தரவாதம் அளித்த மக்கள் தேர்தலில் வாக்களிக்கவேயில்லை. நான் தோல்வி அடைந்தேன்.உண்மையாக ஜனாதிபதி மகிந்தாவிடம் ஒரு தொடர்பும் எனக்கில்லை.

மக்களின் குடும்ப வைத்தியராக தொழில் புரியும் எனக்கு பல்வேறு வகையான மனிதர்களை சந்திக்க நல்ல வாய்பபு

கிடைத்தது. அதனால் நாட்டில் நடப்பவைகளை அறியும் வாய்ப்புகள் கிடைத்தன. புலிகளின் முழுக்கட்டுப்பாட்டிற்குள் யாழப்பாணம் இருந்த காலத்தில் நான் அங்கு வசித்தேன். மக்களுக்கு அவர்கள் செய்த கொடுமைகளை கண்கூடாக கண்டேன். முன்னைய அரசாங்கங்கள் மக்களுக்கு செய்த வன்செயலினால் மக்கள் பட்ட வேதனைகளையுங் கண்டுள்ளேன். எனது வைத்தியசாலை அச்சுவேலியில் இருந்தது. அச்சுவேலி பலாலி இராணுவ முகாமிற்கு சமீபமாக உள்ள கிராமம்.இரவில் அடிக்கப்படும் செல்லடி காரணமாக மக்கள் நித்திரையற்ற இரவுகள் பலவற்றை கழித்திருக்கிறார்கள். எனவே அநேக மக்கள் இரவில் அயல் கிராமங்களுக்கு சென்று தங்குவார்கள்.அவர்களில் சிலர் இரவில் வேற்று மனிதர்களின் வீடுகளில் தங்குவதால் 'இருமல் வராமல் இருப்பதற்கும், சலம் வராமல் இருப்பதற்கும் மருந்து தாருங்கள்" என்று கேட்கும்போது எனக்கு வேதனையாக இருக்கும். குண்டு வீச்சுகள் செல் வீச்சுகள் ஆகியவற்றின் மத்தியில் நான் எனது குடும்பத்துடன் மரணஅபாய சூழ்நிலையில் வைத்திய சேவையைச் செய்தேன். செல் துண்டுகளினால் காயப்பட்ட மக்கள் பலருக்கு வைத்திய உதவிசெய்துள்ளேன். ஒரு இரவு அடி வயிறு சிதறியநிலையில் சகோதர சகோதரியான இரண்டு சிறு பிள்ளைகளை என்னிடம் கொண்டு வந்தனர். என்னால் அவர்களுக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. அப்பிள்ளைகள் யாழ்ப்பாணஅரசாங்க பொதுவைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு மரணமானார்கள். அடுத்த கவலைக்குரிய விடயம் கர்ப்பிணி பெண்கள் பிரசவ வேதனை தொடங்கி பிரசவிக்கும் தருணம் எனது மருத்துவ விடுதிக்குவந்து பிள்ளை பிறந்தவுடன் செல் வீச்சு, குண்டு வீச்சு ஆகியவற்றிற்கு பயந்து சைக்கிளில் வீடு சென்றுவிடுவார்கள். ஒரு சமயம் ஒரு தாய் எமது மருத்துவமனைக்கு சமீபத்திலுள்ள ஒருகாணிக்குள் செல் விழுந்த நேரத்தில் ஒருசூலில் 3 பிள்ளைகளை பிரவசித்தார். எனது வைத்திய சேவையில் பொதுமக்களை மட்டுமன்றி

. ஜேவிபி, தமிழ்ஆயுதக்குழுக்கள், இலங்கை பாதுகாப்பு படை. இந்திய அமைதிகாக்கும் படை ஆகிய வெவ்வேறு துறையினருக்கு சிகிச்சை அளித்துள்ளேன். இப்படியான சந்தர்ப்பம் எத்தனை வைத்தியர்களுக்கு ஏற்பட்டிருக்குமென எனக்குத்தெரியாது. "எமது நாட்டின் பிரச்சனைகள், காணி வழக்குகள் போன்று தீர்வை பெறுவதற்கு தாமதமாவதற்கு காரணம் எமது அரசியல்வாதிகளில் அநேகமானோர் வழக்கறிஞர்களாக இருப்பதே".

**யுத்தநிறுத்த ஒப்பந்தம் தோல்வி அடைந்ததற்கான காரணங்களும் சூழ்நிலைகளும்**

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் சட்டபூர்வமாக தெரிவு செய்யப்பட்ட பிரதமரும் பலநாடுகளில் தடைசெய்யப்பட்ட சட்டவிரோத ஆயுதக்குழுவின் தலைவரும் கைஒப்பம் இட்டனர். மறைக்கப்பட்ட உள்நோக்குடைய, ஆயுதக்குழுக்குச்சார்பான ,நாடு ஒப்பந்தம் செய்ய அனுசாரணையாளராக செயற்பட்டது. நிறைவேற்று அதிகாரமுடையஜனாதிபதி, மாற்றுக்கட்சியை சேர்ந்த பிரதம மந்திரியும், ஸ்ரீலங்காவின் நீதிமன்றினால் 200 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட புலி இயக்க தலைவரும் கை ஒப்பம் இட்டு ஒரு ஒப்பந்தம் செய்ய அநுமதித்தது ஆச்சரியமளிக்கன்றது. கல்விமான்கள், அறிவாளிகள், தொழில்வல்லுனர்கள் சட்ட வல்லுனர்கள் ஆகியோர் புலி இயக்கத்திற்கு யுத்தத்தை தொடர்வதற்கு தேவைப்பட்ட கால அவகாசத்தை அவ்வொப்பந்தம் கொடுக்கின்றது என்பதை எடுத்துக்காட்டாததும் எதிர்ப்புக்காட்டாததும் வேதனையைத்தருகின்றது. யுத்தம் பின்பு தொடர்ந்தது.

யுத்தநிறுத்தம் தோல்வி அடைந்தது கடவுளின் செயல். பாரிய விளைவுகளை குறைத்திருக்கிறது யுத்தம்நிறுத்தம் . தோல்வி அடைந்தகாரணத்தால் யுத்தம் மீண்டும் ஆரம்பமாகி தொடர்ந்து நீண்டகாலம் செல்லாமல்முடிவடைந்ததால் பல்லாயிரம் தமிழ் இளைஞர்கள் யுத்தத்தில் பலிகொடுக்கப்படாமல் தப்பியுள்ளனர்.

புலிகள் இயக்கத்தலைவர் தமிழ்ஈழத்தில் அசைக்கமுடியாத கொள்கைப்பிடிப்பிலிருந்தார். தமிழ் ஈழத்தைத்தவிர்ந்த வேறொன்றிற்காகவும் யுத்தத்தை நிறுத்தமாட்டார். புலிகள் இயக்கம் சார்பாக பங்கெடுத்தவர்களால் ஏற்றுக்கொண்ட ஒஸ்லோ தீர்மானத்தை அவர் நிராகரித்தார். தமிழ் ஈழத்தை தான் கைவிட்டால் தன்னையும் சுடலாமென தனது இயக்கஉறுப்பினர்களுக்கு கூறியுள்ளார். எனவே யுத்தநிறுத்தம் தோல்வியடையுமென எதிர்பார்த்திருக்கலாம்.

யுத்தத்தில் ஓய்வு அவசியமாகும்பொழுது பேச்சுவார்த்தை என்று அழைத்து யுத்தநிறுத்தம் செய்து, மீண்டும் கடும் போர் தொடங்குவது வழக்கம். புலிகள் இயக்கம் ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சுவார்த்தை நடத்தும் காலத்தில் அன்ரன் பாலசிங்கத்திடம் "ஜனாதிபதிஉங்கள் கோரிக்கைகளுக்கு சம்மதித்தால் நீங்கள் ஆயுதங்களை கைவிடுவீர்களா"வென்று ஒரு பத்திரிகையாளர் கேட்டார். 'நாங்கள் ஆயுதங்களை கைவிடோம் மேலும் கோரிக்கைகளை போடுவோம் ஏனெனில் எமது தொழில் யுத்தம் புரிவது' என்று அன்ரன் சொன்னார்.

வன்னிமாவட்டத்தையும் அதன் மக்களையும் புலிகளின் ஆதிக்கத்திற்கு அனுமதிக்கப்பட்டது. ஏ9 பாதையைபாவிப்பவர்களிடம் வரிக்கட்டணம் அறவிட அனுமதிக்கப்பட்டது. பாதுகாப்புபடையினரோ மாற்றுகட்சியினரோ வன்னிக்குள் போகமுடியாது ஆனால் புலிகளிடமிருந்து பல இழப்புகளுடன் கைப்பற்றப்பட்ட யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் எப்பகுதிக்கும் புலிகள் செல்லலாமென சமநிலையற்ற ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளது. அவர்கள் பொங்கு தமிழ் கொண்டாட்டத்துடன் யுத்தத்திற்கேற்ற ஆயத்தங்களை செய்தனர்.

இரண்டு வார அறிவித்தலுடன் யுத்தநிறுத்தத்தை மீறலாமென்ற ஸ்திரமற்ற ஒப்பந்தமாக காணப்பட்டது.

மேற்கூறியவைகள் யுத்தநிறுத்த ஒப்பந்தம் தோல்வியடைய காரணமாயின.

## கற்ற பாடங்கள்

எமது நாட்டின் விடுதலைப் போராட்டமும், முக்கியமாக இந்தியாவில் மகாத்மா காந்தியின் அகிம்சை போராட்டமும் எமக்கு சுதந்திரத்தை எடுத்துத் தந்தது. காலனிய எஜமானார்கள் எமது நாட்டின் கரைகளை விட்டு செல்வங்களுடன் சென்றார்களே தவிர சந்தோசத்துடன் செல்லவில்லை அவர்கள் தமது பிரித்தாளும் கொள்கையை தம்மை பின்பற்றும் அதிகார ஆசையுள்ள தலைவர்களான சாமுவேல் ஜேம்ஸ், டொன் ஸ்டீபன், சொலமன் வெஸ்ட் றிச்ட்வே டயஸ், யுனியேஸ் றிச்சாட் போன்றவர்களிடம் விட்டுச் சென்றனர். காலனிய எஜமானர்களின் மதம் சார்ந்த தலைவர்களாகவும் இருந்தனர். அவர்களின் அரசியல் காரணமாக எமது தாய் நாடு பல உயிர்களையும் பல கோடி ரூபாக்களையும் சமாதானத்தையும் அதன் நற் பெயரையும் இழந்துள்ளது. இன்றும் அந்த எஜமானர்கள் எமது நாட்டை சீர்கெடுக்க முற்படுகின்றனர்.

## எமது நாட்டின் யுத்தத்தின் காரணங்களாவன பின்வருமாறு:

1. 1949ம் ஆண்டு மார்கழிமாதம் 19ம் திகதி சாமுவேல் ஜேம்ஸ், வேலுப்பிள்ளை செல்வநாயகம், சம்ஷ்டி கட்சியை ஆரம்பித்து அதற்கு தமிழரசு கட்சி என பெயரிட்ட காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு பிரச்சனைகள் ஒன்றும் இருக்கவில்லை. ஆனால் சிங்களமக்களுக்கு தமிழரசு என்ற பெயர் பெரிய சந்தேகத்தை கொடுத்தது.

2. இலங்கை தமிழரசு கட்சியின் பெயர் சிங்கள மக்களுக்கு கொடுத்த பயத்தின் எதிரொலியாக டொன் ஸ்டீபன், சேனநாயக்கா இலங்கையின் தெற்கில் நிலங்கள் இருந்த போதும் சிங்கள மக்களை வடக்கிலும் கிழக்கிலும் குடியேற்றினர்.

3. 1956ம் ஆண்டு சொலமன் வெஸ்ட் றிச்ட்வே டயஸ், பண்டாரநாயக்கா முன்பு யுனியேஸ் றிச்சாட் ஜெயவர்டனாஅவர்களால் முன்மொழியப்பட்ட சிங்களம் மட்டும் சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அன்றைய தினம் சமஷ்டி கட்சியினர் காலிமுகத்திடலில் பாராளுமன்றத்திற்கு எதிரே சத்தியாக்கிரகம் செய்தனர்.காடையர்கள் அவர்களை அடித்தனர். அன்று அங்கு ஆரம்பித்த வன்செயல் தான் நந்திக் கடல் உயிரிழப்பில் முடிவடைந்தது.

4. பஸ் வண்டிகளின் நம்பர் தகடுகளில் சிங்கள ஸ்ரீ எழுத்துக்களை தமிழரசுக்கட்சியினர் அழித்ததை தொடர்ந்து தெற்கில் பெயர் பலகைகளில் இருந்த தமிழ் எழுத்துக்கள் அழிக்கப்பட்டு தமிழ் மக்களுக்கு எதிரான விரோதச் செயல்கள் தெற்கில் மேலோங்கத் தொடங்கியது. "செல்வநாயகம் தன்னுடன் நல்ல நட்பாக பழகியவர் தன்னிடம் பல உதவிகளைப் பெற்றவர் அந்த புதிய பஸ்களை அவர் கேட்டபடியால் தான் கொடுத்தேன். அவர் தார் போட்டு அழித்தார் என்று அறிந்தவுடன் அதிர்ச்சி அடைந்தேன் வேறு பஸ் கேட்டிருந்தால் கொடுத்திருப்பேன்" என்று அக்காலத்திலேயே பண்டாரநாயக்கா கூறியிருந்தார்.

5. 1958ம்,1977ம் 1983ம் ஆண்டுகளில் நடைபெற்ற இனக்கலவரங்களினால் தமிழ் மக்கள் தமது பாதுகாப்பிற்காக வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடம்பெயர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. 1958 ல் தெற்குப் பகுதியில்

காடையர்கள் தமிழர்களை கொலைசெய்தும் சொத்துக்களை சூறையாடிய போதும் சிங்கள மக்கள் பலர் அவர்களை பாதுகாத்தனர். வடக்குக் கிழக்கில் சிங்கள மக்களை காடையர்கள் கொலைசெய்தும் சொத்துக்களை சூறையாடிய போதும் தமிழ் மக்கள் பலர் அவர்களை பாதுகாத்தனர்.(காடையர்கள் என்பது இரு இனத்திலும் உள்ள ஒரு தனி இனம்)

6. 1981ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தின் அரும் பெரும் சொத்தான பொது நூலகத்தை தெற்கில் இருந்து வந்த காடையர்கள் எரித்ததும், கண்மூடித்தனமாக தமிழ்மக்களை பாதுகாப்புப் படையினர் துப்பாக்கியால் சுட்டதும் யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடு உட்பட பல வீடுகளை எரித்ததும் ஒரு முக்கிய காரணம்.

7. 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடந்த உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் கடைசி தினத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த 8 பேரின் மரணங்கள். அன்று உண்மையாக நடந்த சம்பவம் பின்வருமாறு: இலங்கைக்கு சட்ட விரோதமாக நுழைந்த இந்தியப் பிரஜையான ஜனார்த்தனன் என்பவரை அவரின் அரசியல் தொடர்பு காரணமாக கைது செய்ய பொலிசார் முனைந்தனர் அப்பொழுது குழப்பம் உருவாகி பொலிஸிற்கு கல்லெறி, விழத்தொடங்கியதால் ஆகாயத்தை நோக்கி சுட்ட பொழுது மின்சார கம்பிகள் அறுந்து விழுந்து மின்சாரம் தாக்கி 8 பேர் உயிரிழந்தனர். இருதய நோயினால் ஒருவர் மரணமடைந்தார்.

8. 1976ம் ஆண்டு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி முன்வைக்கப்பட்ட தமிழீழம் என்ற தீர்மானம் தமிழ் மக்களின் பேரழிவிற்கு வித்திட்டது. சமஷ்டி

தமிழரசுகட்சியின் செல்வாக்குச் சரியத் தொடங்கி தமிழ் காங்கிரஸின் பெரும் தலைவர்களும் தோல்வியடைந்தபடியால் இரு கட்சிகளும் தேர்தலை இலகுவாக வெல்லும் உள்நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு அமைப்பே இந்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தமிழ் மக்களின் ஆதரவை மேலும் பெருக்கும் நோக்குடனும் சிங்கள மக்களின் சந்தேகத்தை வலுப்படுத்தும் எண்ணத்துடனும் சமஷ்டி என்ற கொள்கைக்கு மேலாக தமிழீழம் என்னும் கொள்கையை முன் வைத்தனர். ஆனால் அன்றே கூட்டணிதலைவர் செல்வா தமிழீழம் சாத்தியமில்லை கூடக் கேட்டால் குறைய தருவார்கள் என்ற கூறினார். வேறு சில பாராளுமன்ற அங்கத்தவர்கள் தமிழீழம் என்பது தேர்தல் வெற்றிக்காக பாவிக்கப்பட்ட சுலோகம் என்பதை ஒத்துக்கொண்டனர்.

9. பயங்கரவாத தடைச்சட்டம், காரணமின்றி கைது செய்தல், சித்திரவதை கொலை போன்றவற்றால் தமதுவாழ்விற்கு உத்தரவாதமில்லை என்பதை இளைஞர் உணர்ந்தனர். ஆதலால் இளைஞர் தம்மையும் தமிழ்மக்களையும் காப்பாற்ற ஆயுதம் ஏந்தினர். கண்மூடித்தனமாக மக்களை சுட்ட படையினருக்கு எதிராக இளைஞர்கள் ஆயுதத்தை பாவித்தனர்.ஆயுதம் ஏந்தாவிட்டால் படையினர் கற்பழிப்பார்களெனக்கூறி பெண்பிள்ளைகளை வன்முறையாளர்கள் ஆயுதம் ஏந்தச்செய்தனர். சிங்கள மக்களையும் அவர்களின் தலைவர்களையும் பிசாசுகளாக்கிப்பேசியும் சில காரியங்களையும் செய்தும் தமிழரசுக்கட்சியினர் இளைஞர்களை துாண்டினர். பயங்கரவாத தடைச்சட்டம் நிறைவேற்றப்பட்ட தினம் கூட்டணியினர் பாராளுமன்றத்தில் சமுகம் அளிக்காவிட்டாலும் அச்சட்டத்திற்கு அரசாங்கத்திடம் சம்மதம் அளித்திருந்தனரென்பது ஒரு

சிலதமிழர்களுக்கு மட்டுமே தெரியும். அது கூட்டணியினரால் மூளைசலவைசெய்யபட்டு வன்செயலுக்கு தூண்டப்பட்ட இளைஞர்களுக்கு அவர்கள் செய்த மகாபெருந்துரோகம்.

10. ஆயுதபோராட்டத்திற்கு தமது நன்மைக்காக வேற்றுநாடுகள் ஊக்கமளித்தனர். மேலைநாடுகள் காலனியஆட்சியை மீள அமைப்பதற்காக எம் நாட்டில் கால்பதிக்கவும், ஆயுதவிற்பனை மூலம் லாபம் அடையவும் தமிழ் இளைஞருக்கு ஆதரவளித்தனர் என்பது எனது அபிப்பிராயம்.

11.ஜேஆர் அரசின் வெளிநாட்டுக்கொள்கை இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சத்தை கொடுத்தது மேலும் ஒரு காரணம்.

12.ஜனாதிபதி ஜேஆர் மேற்கு நாடுகள் பக்கம் சாய்ந்ததுடன் பாகிஸ்தானுடன் நட்பாகி இந்தியாவை எரிச்சலூட்டினார். காலஞ்சென்ற அநுரா பண்டாரநாயக்கா தான் ஒரு சிகறெற் குடித்து அடுத்த சிகறெற் எடுக்கமுன் இந்தியா இலங்கையை அழிக்கும் ஆற்றல் உடையது. எனவே இந்தியாவை பகைக்க வேண்டாமென எச்சரித்திருந்தார். மேற்குலக நாடுகள் இலங்கை விவகாரங்களில் அதிக அக்கறை காட்டியது இந்தியாவிற்கு சந்தேகத்தை கொடுத்தது. எனவே அது ஆயுதமேந்திய தமிழ் இளைஞருக்கு உதவி செய்து ஈற்றில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் ஜேஆர் கை ஒப்பம் இட வழி வகுத்தது.சிறிது காலத்திற்கு முன்பு இந்திய மந்திரி தமது பிற்புலத்தை (இலங்கை) பிறர் விளையாட்டு மைதானமாக பாவிப்பதற்கு அநுமதிக்கமுடியாது என்று கூறியதை உணரவேண்டும்.

13.இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்த காலப்பகுதியில் ஒரு இந்திய பல்கலைகழக மாணவன்

இலங்கைத்தமிழர்களுக்காக பெருந்தொகை பணத்தை ஏன் செலவழிக்கிறீர்களென இந்திய பிரதமர் ரஜீவ் காந்தியை கேட்டார். அப்படி தாங்கள் செலவழிக்காவிடின் பிற்காலத்தில் பெருந்தொகை பணத்தை இந்தியாவின் தெற்கெல்லையை காப்பாற்ற செலவு செய்ய வேண்டிவருமென பிரதமர் கூறினார்.

தற்பொழுது பல இந்துக்கள் வடக்கு மாகாணத்தில் கிறிஸ்தவர்களாக மாறியுள்ளனர். பல கிறிஸ்தவ தேவாலயங்களும் கட்டப்பட்டுள்ளன புலம்பெயர்ந்த பல தமிழர்களும் கிறிஸ்தவர்களாக மாறிவிட்டனர். புலிகள் இயக்கமும் இந்துக்களுக்கு வேதனை கொடுக்கும் விடயங்கள் செய்துள்ளனர். .இந்துக்கள் மரணமடைந்தவர்களின் உடல்களை கோவில்களுக்கு அருகாமைக்கு எடுத்துச்செல்வதில்லை. ஆனால் புலிகள் படைவீரர்களை சுட்டபின் உடல்களை நல்லூர் கந்தசாமிகோவில் பின்வீதியில் மக்கள் பார்ப்பதற்காக போட்டனர். மரணித்த புலிஉறுப்பினர் குமரப்பன் உடன் 13உறுப்பினர்களின் உடல்களை புன்னாலை கட்டுவன்ஆயர்கடவை பிள்ளையார் கோவில் வீதியில் மக்கள் அஞ்சலிக்காக வைத்தனர். இவ்விடயங்கள் இந்துக்களை வேதனைப்படுத்தும் செயலாக இருந்தன.

இவைகளை பார்க்குமிடத்து ஆயுதப்போராட்டமும் யுத்தமும் மேற்குலகநாடுகளுக்கும் கிழக்குலக நாடுகளுக்குமிடையிலும் ,மேற்குலக சமயங்களுக்கும், கிழக்குலக சமயங்களுக்கு இடையிலுள்ள யுத்தமாகும். தமிழ் இளைஞர்கள் இலங்கையை சீர்குலைக்க பாவிக்கப் பட்டிருக்கிருக்கிறார்கள்.

## மேலும் இப்பிரச்சனைகள் வராமல் தடுப்பதற்கு என்ன செய்ய வேண்டும்.

**நாம் கடவுளை நம்ப வேண்டும். மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் சரியானவற்றை செய்யவேண்டும். கடவுள் எல்லோரையும் காப்பாற்றுவார்.**

சிங்களமொழியில் மட்டும் தான் தேசிய கீதம் பாடவேண்டுமென்பது சிங்களம் மட்டும் அரசாங்கமொழியாக ஆக்கப்பட்டதின் ஏற்பட்ட நிகழ்வுகள் மீண்டும் இந்நாட்டில் ஏற்பட வழிவகுக்கக்கூடும். எனவே ஜனாதிபதி இப்பிரச்சனையை முளையிலேயே கிள்ளிவிடவேண்டும் சிங்களத்தில் மட்டும் தேசிய கீதம் பாடவேண்டுமென்று கூறுவோர் இன்னும் சிங்களம் மட்டும் சட்டம் ஏற்படுத்திய அனர்த்தங்களை உணராதவர்களாக இருக்கிறார்களென நினைக்க ஆச்சரியத்தைக் கொடுக்கிறது கொடுக்கின்றது. ஒரு இலங்கையன் தேசிய கீதத்தை தனதுதாய்மொழியின் பாடும்பொழுதான் உண்மையான தேசப்பற்று உண்டாகும்.

இந்நாடு சிங்கள புத்ததேசம் என்று கூறுபவர்களுக்கு சிங்களவரின் சரித்திரமும் தெரியாது, புத்தசமயத்தின் சரித்திரமும் தெரியாது. முன்னை நாள் இராணுவ தளபதி சரத் இது சிங்கள புத்த நாடு என்று கூறிவிட்டு தனக்கு சரித்திரம் தெரியாது என்பதை ஒத்துக்கொண்டார்.

கடவுள் உண்மையாகவும் நீதியாகவும் நடப்பவர்களை காப்பாற்றுவார் அவர்களுக்கு உதவியும் செய்வார்.இதை நான் எனது அநுபவத்தின் ஊடாக சொல்கிறேன்.

நான் எனது மனட்சாட்சிக்கு விரோதமாக ஒன்றும் செய்வதில்லை. ஆயுதம் ஏந்திய தமிழ் இளைஞர்கள் தமிழ் மக்களை கொடுமைப்படுத்தி மரியாதையின்றி நடத்தினார்கள். ஆரம்ப 80களில் ஒரு நாள் புலிகள் இயக்கத்தை சேர்ந்த

இளைஞர்கள் விடுதலை போராட்டத்திற்கு என்னிடம் பணம் கேட்டு வந்தார்கள். நான் எனது மனச்சாட்சியின் காரணமாக அவர்களுக்கு பணம் கொடுக்கவில்லை. தமிழனாகிய எனக்கு தமிழர்களின் பிரச்சினை பற்றி நன்கு தெரியும். வேறு நாடுகளில் விடுதலைக்கு கல்விமான்கள் புத்திஜீவிகள் தொழில்விற்பன்னர்கள் ஆகியோர் போராடுவார்கள். இளைஞர்களாகிய நீங்கள் மட்டும் போராடுவது ஏற்புடையதல்ல, போராட்டம் சரியான பாதைக்கு வந்தால் எனது பொருள் முழுவதையும் தந்து நானும் போராடுவேன் அதுவரை என்னிடம் பணம் கேட்டு வராதீர்ளென்று சொன்னேன். அவர்கள் ஒன்றும் பேசாமல் சென்றுவிட்டனர்.

1987ம் ஆண்டு இந்திய அமைதிப்படை எமது இடங்களை நோக்கிமுன்னேறி வரும்போது நான் எனது குடும்பத்துடன் ஏனைய மக்களைப்போல் கோவிலில் தங்கியிருந்தேன். ஒருநாள் கமாண்டர் கோவிலுக்கு வந்து எனது வீட்டிலிருந்து வைத்தியம் செய்யுமாறு சொன்னார். கமாண்டரும் சிப்பாய்களும் முன்னால் செல்ல நானும் எனது குடும்பத்தினரும் பின்னால் சென்று கொண்டிருந்தோம். சடுதியாக புலிகள் இயக்கத்தினர் சிலர் ஒரு சிறுகுறுக்கொழுங்கையால் ஆயுதத்துடன் எம்மருகில் வந்து விட்டனர். உடனே நான் படையினருக்கு ஒன்றும் செய்யாதீர்கள் நீங்கள் அவர்களை சுட்டால் அவர்கள் எங்களை சுடுவார்கள் என்று அவர்களுக்கு சொன்னேன். கடவுள் செயலால் அவர்கள் மனம் மாறிச் சென்று விட்டனர் படையினரும் அவர்களைகாணவில்லை

இன்னொரு நாள் எனது வைத்தியசாலைக்கு நான் மோட்டார் வாகனத்தில் வைத்தியசாலைக்கு செல்லும் பொழுது கெலிகொப்டர் வானத்திலிருந்து சுடும் சத்தங்கள் கேட்ட வண்ணமிருந்தது. ஒரு வெளியான இடத்தில் செல்லும்பொழுது துவக்குச் சன்னம் வாகனத்தின் பின்னால் போவதாக எனது உதவியாளர்

சொன்னார். உடனே முருகாஎன்று கூறிக்கொண்டு நான் வாகனத்திலிருந்து இறங்கினேன். உதவியாளரையும் இறங்கச்சொன்னேன். றோட்டிற்கு சமீபமாக வானத்தில் நின்ற கெலிகொப்டர் திரும்பி சென்றது. அதுவும்

கடவுளின் செயலே.யாழ்ப்பாணம் புலிகளின் முழுக்கட்டுப்பாட்டில் இருந்த காலத்திலும் நான் சிறிலங்கனாகவே சிறிலங்கா சட்டத்திற்கு அமையவே நடந்தேன். புலிகள் இயக்கம் எல்லா டாக்டர்களின் வைத்தியசாலைகளையும் தங்கள் அமைப்பின் கீழ் 1995 ஆண்டு ஐப்பசி 31க்கு முன் பதிவுசெய்யும்படி சொன்னார்கள். சிறிலங்கா அரசின் இலவச கல்வியின் மூலம் கல்வி கற்றதனால் அவர்களின் கீழ் பதிவு செய்வது முறையல்லவென கூறி நான் பதிவு செய்யவில்லை. கடவுளின் செயலால் அவர்கள் 31-ம் திகதி யாழ்ப்பாணத்தைவிட்டு சென்றுவிட்டார்கள்.

ஜனாதிபதி சந்திரிகா 1994 ஆட்சி அமைத்தபின் தனது பெற்றோரின் அரசாங்கங்கள் உட்பட முன்னைய அரசாங்கங்கள் தமிழர்களுக்கு அநீதி விளைவித்ததை ஒத்துக்கொண்டு சகல இனங்களுக்குமிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரும்பாடுபட்டார். படையினர் மனிதநேயத்துடனும், மனித உரிமைகளை மதித்தும் நடக்கவேண்டுமென்று கண்டிப்பாகப்பணித்தார். அவருடைய அரசியல் தலைமையில் 1995 வைகாசி மாதம் தொடங்கி 5 மாதங்களில் புலிகளை யாழ்ப்பாணத்தைவிட்டு ஓடச்செய்தார். யு.என்.பி 5வருடங்களுக்கு மேலாக சண்டையிட்டும் செய்ய முடியாததை அவர் 5மாதத்தில் செய்துமுடித்தார்

அதற்கு மேலாக ஜனாதிபதி ராஜபக்ஸ 2வருடத்தில் தமிழர்களையும், நாட்டையும் பயங்கரவாதத்திலிருந்து

மீட்டெடுத்தார். அவருடைய தேசபற்று, கடமை, உணர்வு துணிவு,சாதுர்யம் மனிதநேயம் ஆகியவை மனிதாபிமான யுத்தத்தில் அவருக்கு வெற்றியைக்கொடுத்தது. அந்த யுத்தத்தை வெற்றிபெற கடவுளும் பாதுகாப்புசெயலாளரையும் முன்னாள் இராணுவதளபதியையும் வெடிகுண்டுத் தாக்குதலிலிருந்து காப்பாற்றினார். இப்பொழுது நாம் உண்மையான தேசபற்றுடன் இலங்கையராக சமாதானமான எமது தாய்நாட்டில் வாழலாம். எனது தாய் நாட்டில் உள்ள பற்றின் காரணமாக இங்கிலாந்து முன்னாள் பிரதம மந்திரிக்கும் இப்பொழுது உள்ள பிரதம மந்திரிக்கும், பிரிட்டிஸ் மெடிகல் சஞ்சிகைக்கும் இந்திய பிரதம மந்திரிக்கும் நான் எமது தாய் நாட்டின் உண்மையான நிலைகள் பற்றி கடிதங்கள் எழுதியுள்ளேன். பிரதிகளை இங்கு சமர்ப்பிக்கிறேன்.

## தமிழ் அரசியல்வாதிகள் (மிதவாத) தமிழ் மக்களின் வில்லன்கள்

அவர்கள் அரசியல் செய்யவில்லை அரசியல் 'தந்திரவித்தைகளையே' செய்தார்கள். தமிழ் மக்களின் தரித்திர வாழ்க்கைக்கும் ஆயிரக்கணக்கான,உயிரிழப்பிற்கும் ,கோடிக்கணக்கான பணம்சொத்துகள் இழப்பிற்கும் நாட்டை விட்டு ஓட வேண்டிய நிலைக்கும் பொறுப்பு அவர்களே.

பெரும்பாலான தமிழர்கள் தமிழில் மிகுந்த பற்றுள்ளவர்கள். தமிழ் தங்கள் உயிர் என்பார்கள். மொழி மக்களிடையே கருத்துப்பரிமாற்றத்திற்குப் பாவிக்கும் ஒரு சாதனம். ஆனால் தமிழருக்கு தமிழ் மொழி அதற்கும் மேலானது. தமிழ் பல அறிவுப்பொக்கிஸங்களடங்கிய மிகப்பழமையான மொழி.திருக்குறள் அவைகளில் ஒன்று. திருக்குறளைப் படித்த ஒரு ரஷ்ய அறிஞர் தனது கல்லறையில் 'ஒரு தமிழ் மாணவன் உறங்குகிறான்' என்று எழுதும்படி பணித்திருந்தார்.

முருகப்பெருமான் (கதிர்காமக்கடவுள்) அகஸ்திய முனிவரை தமிழை வளர்க்கச்செய்தார். தமிழர் தமிழின் மேல் உள்ள

பற்றின் காரணமாக யாரும் மேடையில் ஏறி தமிழுக்காக தனது உயிரையும் கொடுப்பேனென்று ஒரு வெற்றுப்பேச்சு பேசினாலே போதும் தமிழரில் உள்ள ஏமாளிகளில் பெரும் பகுதியினர் அப்பேச்சில் மயங்கிவிடுவார்கள். தமிழரின் அந்த பெலயீனத்தை தமிழ் அரசியல்வாதிகள் தமக்குசாதகமாகப் பாவித்துக்கொண்டனர்.

அமரர் செல்வநாயகம் 1949-ம் ஆண்டு மார்கழி மாதம் 19-ம் திகதி சம்'டிக்கட்சியை ஸ்தாபித்தார். சமஷ்டிக்கு தமிழரசு என்ற பெயர் இருக்கும்வரை சிங்கள மக்கள் சம்'டியை ஏற்க மாட்டார்களெனவே தமிழுக்காக போராடுகிறேனென்று முடிவடையாத போராட்டத்தை தான் இறக்குமட்டும் தொடர்ந்து பாராளுமன்றத்தில் இருந்து பின்பு தனது மகன் அதை தொடரலாமென்ற எண்ணத்தில் இருந்திருக்கிறார். பாராளுமன்றம் பல விடயங்களை விவாதிக்கும் இடம். புத்திக்கூர்மையுடன் விவாதிக்கும் ஆற்றலுடையவர்கள் பாராளுமன்றம் செல்லவேண்டும். செல்வநாயகம் பலகாலமாக நோய் வாய்ப்பட்டிருந்தார். தமிழரசுக்கட்சியினர் தமிழ் மக்களின் உரிமைக்காக போராடுபவர்களாக இருந்தால் அவரின் பாராளுமன்ற ஆசனத்தை ஏன் நன்கு விவாதிக்கக்கூடிய ஒருவருக்கு கொடுக்கவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது.. தமிழரசுக்கட்சினரின் நடவடிக்கைகளை அவதானிக்கும்போது அவர்கள் பாராளுமன்ற ஆசனங்களே தமது குறிக்கோளாக வைத்திருந்தனர் என்பது புலனாகிறது. எனினும் தமிழரசுக்கட்சியின் தலைவர் செல்வா இறக்கும்வரை பாராளுமன்ற அங்கத்தவராக இருந்தபோதும் அதன் பலன்களை அவரால் அநுபவிக்கமுடியவில்லை. அது அவருக்கு கடவுளின் தண்டனை.ா,ந்தியாவின் சுதந்திரத்திற்கு போராடிய காந்தி ஆற்றல் மிக்கவரான நேருவை பிரதம மந்திரி ஆக்கினார்.

செல்வா தனது பெருந்தோட்டங்களை விற்று தமிழ் மக்களுக்காக போராட தமிழரசுக்கட்சியை ஆரம்பித்ததாக

சொல்லப்பட்டது. பல அப்பாவி ஏழை மக்கள் பலியாவதற்கு காரணமாகவிருந்ததும் அக்கட்சியே.

அவர் கட்சி ஆரம்பித்த காலத்தில் தமிழில் பேச முடியாமல் கூட்டங்களில் ஆங்கிலத்தில்தான் பேசுவார். தமிழரின் தாய்மொழி, தாயகம் பற்றி பேசியவர் தமிழரின் தாய்மதம் பற்றி ஏன் பேசவில்லை? அந்நியர் எமது நாட்டை ஆக்கிரமிக்குமுன் தமிழர்கள் முற்றுமுழுதாக இந்துக்களாக இருந்தனர். அந்நியரின் ஆட்சிகாலத்தில் இந்துக்கள் விரதம் பிடிக்கப்பயந்தனர். விரதநாட்களில் வாழைஇலைகளில் சாப்பிட்டபின் இலைகளை தமிழ் கிறிஸ்தவர்களுக்கு பயந்து ஒளித்துவைப்பார்கள். கிறிஸ்தவ பாடசாலைகளில் படிக்கும் இந்து மாணவர்கள் பாடசாலைக்குள் நுளையும்போது தமது நெற்றியிலுள்ள திருநீற்றை அழித்துவிடவேண்டும்.

பண்டாரநாயகாவின் சிங்கள மட்டும் சட்டம் பல அழிவுகளை நாட்டில் ஏற்படுத்தியது. ஆட்சி அமைக்கும் ஆசையில் அச்சட்டத்தை கொணர்ந்த அவரின் வாழ்க்கை சடுதியில் முடிவடைந்தது. அது அநீதிக்குக்கிடைத்த கடவுள் தண்டனை.

அமிர் இளைஞனாக இருக்கும்பொழுது செல்வா அவரைத்தம்வசப்படுத்தினார். அமிர் இளம் பிரபாகரனை தம்வசப்படுத்தினார். பிரபாகரன் பல இளஞர்களை அவ்வாறே கவர்ந்தெடுத்தார். அவ்விளைஞர்கள் விடுதலையின் பெயரால் பல வன்செயல்களில் ஈடுபட்டனர். எனக்கு சந்தர்ப்பங்கள் கிடைத்த வேளைகளில் அவ்வாறு நடக்கும் இளஞர்களுக்கு ஏழைகளின் கண்ணீர் வெற்றியை தரவிடாது என்று எச்சரித்திருக்கிறேன். கடவுள் அவர்களையுந் தண்டித்திருக்கிறார்.

தமிழ் அரசியல்வாதிகள் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இருக்கும்போது சிங்களமக்களுக்கெதிராக காரசாரமாக வகுப்புவாதம் பேசுவார்கள் சிங்கள தலைவர்களை பேய் பிசாசு மாதிரி வர்ணிப்பார்கள். ஆனால் தெற்கு சென்றவுடன் சிங்கள தலைவர்களுடன் மிகவும் அந்நியோனியமாக நடப்பார்கள். தமிழர்கள் மத்தியில் ஆயுதபடையினருக்கு எதிராக கடுமையாக விமர்சிக்கும் அவர்களுக்கு தெற்கில் அதே ஆயுதபடையினர்தான் பாதுகாப்பு கொடுக்கின்றனர்.

தமிழரசு கட்சியினர் தமிழ் மக்களையும் தமிழ் அரசாங்க ஊழியர்களையும் சிங்களம் படிக்க வேண்டாமென தடுத்தார்கள். பலர் அவர்கள் சொல்கேட்டு தமது வேலைகளை இழந்தனர். பத்மநாதன் என்பவர் செல்வாவின் கீழ் ஒரு சமயம் வேலை செய்தார். ஒரு நாள் தன்னிடம் வருமுன் எங்கே வேலை செய்ததாக செல்வா அவரிடம் கேட்டார். தான் எழுத்துவினைஞராக வேலை செய்ததாகவும், தமிழரசுக்கட்சியினர் கேட்டுக்கொண்டபடி சிங்களம் படியாததால் வேலையை இழந்ததாகவும் சொன்னார். அதற்கு செல்வா தாங்கள் அரசியலுக்காகச்சொன்னோம் நீ ஏன் விசரன்போல் அதை கேட்டு நடந்தாய் என்று சொன்னாராம். பத்மநாதன் அடுத்த நாள் அந்த வேலையையும் விட்டுச்சென்றுவிட்டார்.

1960ம் ஆண்டு யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பாக தமிழரசுக்கட்சியினர் பல மக்கள் பங்கு பற்ற சத்தியாக்கிரகம் செய்தனர்.(நான் சிறுவனாக கச்சேரிப்பக்கம் சென்று அதை அவதானித்து வந்தேன். தலைவர்களில் அன்றும் நம்பிக்கை பிறக்கவில்லை). சில வருடங்களுக்குப்பின் பாராளுமன்றத்தில் பேசும்பொழுது, 'நாம் கச்சேரிமுன் சத்தியாகிரகம் செய்யும் காலத்தில் (அமரர்) நிசங்க விஜேரட்ன வடக்கிற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவருடன் எங்களுக்கு சுமுகமான உறவு இருந்தது. அவர் எங்களை மனிதவேலிகளுக்கூடாக இராப்போசனங்களுக்கெல்லாம்

அழைத்திருந்தார்', என்று அமிர்தலிங்கம் கூறியிருந்தார். அதெல்லாம் சத்தியாகிரகம் செய்த மக்களுக்கு தெரியாது. சட்டமறுப்பாக தபால்முத்திரை ஒட்டுவதாக மக்களுக்குசொல்லி தபால் அனுப்பினார்கள். எனக்கு ஒரு சட்டதரணி சொன்னார் அவர்கள் முத்திரையை வெட்டியபின் ஒட்டினதால் அவர்களை சட்டத்தின்முன் கொண்டு வர முடியாதென்று.

ஸ்ரீமாவோவின் ஆட்சியில் யாழ்ப்பாணத்திற்கு ஒரு பல்கலைக்கழகம் அமைத்தபோது அதையும் அவர்கள சிங்களக்குடியேற்றம் வரப்போகிறது என்று மக்களை ஏமாற்றி எதிர்த்தார்கள். திறப்புவிழாத்தினத்தில் கறுப்புக்கொடி காட்டினார்கள். ஆனால் ஸ்ரீமாவோ தமிழருக்க செய்த நன்மையால் பல ஏழைத்தமிழ் மாணவர்கள் பட்டதாரிகளாகிவட்டனர்.

பேரினவாதமென பேசும் தமிழரசுக்கட்சினருக்கு பதிலடி கொடுப்பதுபோல் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள வகுப்புவாதிகளும் சிங்கள மக்களிடையே தமிழ்மக்களுக்கெதிராக காழ்ப்புணர்ச்சியை உருவாக்கினர். அது உக்கிரம் அடைந்து ஈற்றில் பல வன்செயல்களில் முடிவடைந்தது. தமிழ் உயிர்கள் உடைமைகள் அழிக்கப்பட்டன. உயிருடன் ரயர்கள் மேல் வைத்தும் கொழுத்தப்பட்டனர். 1958,1977, 1983, ஆகிய ஆண்டுகளில் நடந்த இனக்கலவரங்களின்போது தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்கள்தான் அவர்களுக்கு பாதுகாப்பு என கருதி அங்கு அனுப்பப்பட்டனர்.

அமர்தலிங்கம் பிரபாகரன் உட்பட பல இளைஞர்களின் மூளைகளை சலவை செய்துவிட்டார். அமிரின் வீரப்பேச்சுகளை தேர்தல் கூட்டங்களில் கேட்கும் இளைஞர்கள் தமது கைகளை கத்தியால் கீறி அமிரின் நெற்றியில் தமது இரத்தத்தால் திலகமிட்டார்கள். வன்செயலிற்கு தூண்டப்பட்ட இளைஞரின் முதல் அரசியல் பலிக்கடா யாழ் மேயர் அல்பிரட்

துரையப்பா.அல்பிரட். துரையப்பா பெரும் அரசியல்வாதியான ஜி.ஜி.யை தோற்கடித்த பெருமையுடையவர். அவருடைய செல்வாக்கைக்கண்டு பயந்த தமிழரசுக்கட்சியினர் அவருக்கு துரோகபட்டம் கொடுத்தனர்.தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் களைப்பிடுங்குதல் கொள்கையின் படி அவர்தான் முதல்பிடுங்கப்பட்ட "களை" அவர் கோவிலில் சுவாமி கும்பிடும்போது சுடப்பட்டார். மகாத்மாகாந்தி அகிம்சை சத்தியாக்கிரகம் ஆகியவை மூலம் இந்தியாவின் விடுதலைக்காகப் .போராடினார். போராட்டத்திற்கு வன்செயலைப்பாவித்தால் தான் தனது போராட்டத்தை நிறுத்திவிடுவார் என எச்சரித்தார். ஆனால் இலங்கையில் ஈழத்து காந்தியும் தமிழரசுக்கட்சியினரும் அப்படிசெய்யவில்லை மாறாக அவர்கள் வன் செயலை தூண்டிவிட்டனர் 1977ம் ஆண்டு அமிர்தலிங்கம் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி தலைவரானனார் தமிழீழம் கொள்கையை முன்வைத்து பல பாராளுமன்றம் ஆசனங்களை வென்று எதிர்கட்சித்தலைவருமானர்.

ஒரு முன்னாள் த.ஐ.வி.முன்னணி பாராளுமன்ற அங்கத்தவர் ***தமிழரசு என்று 25 வருடம் ஓட்டிவிவிட்டோம், தமிழீழம் என்று 50 வருடம் ஓட்டமாட்டோமா என்று கூறியதையும் கேள்விப்பட்டிருக்கிறேன்.***

**அமிர்தலிங்கம் பிரபாகரனுக்கு நேரிலேயே தமிழீழம் சாத்தியமில்லை தாங்கள் தேர்தலுக்காக பாவித்தோமென்று சொல்லியிருந்ததையும் கேள்விப்பட்டிருக்கிறேன்.**

தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு எதிரானவர்களை கொலைசெய்வதிலும் வேறு வன்செயல்களிலும் (கொள்ளை அடித்தல், தமது தனிப்பட்ட பிரச்சனைக்கும் கொலை செய்தல். குற்றம் செய்தவர்களை தாமே விசாரித்து லைற் கம்பங்களில் கட்டிவிட்டு மக்கள் முன் சுடுதல், வாகனங்களை பறித்தல் சாரதிகளை கட்டி வாய்க்கு பிளாஸ்ரர் ஒட்டி

டிக்கியில் போட்டபின் வாகனத்தை கொண்டுசெல்லுதல் மக்களை துன்புறுத்தல், சிறைவைத்தல் கப்பம்கோருதல்,வீடுகளை பறித்து தாங்கள் இருத்தல் ஆகியவைகளில்)ஈடுபட்டபின் கொறில்லா யுத்தமாக ஆயுதபாணிகளின் விடுதலை போராட்டம் மாறியது. எமது பிரச்சனையில் வேறு நாடுகள் தலையிடத்தொடங்கின. பி.எல்.ஓ. பயிற்சி வீரர் , லிபியா பயிற்சி வீரர், லெபனன் பயிற்சி வீரர், இந்திய பயிற்சி வீரர் என கேள்விப்பட்டோம். 1983 இன கலவரத்தின் பின் பல தமிழ் இளைஞர்கள் ஆயுத பயிற்சி பெற்றனர். மேற்குலக நாடுகளும் எமது பிரச்சனையில் ஈடுபடத் தொடங்கின. கொறில்லா யுத்தம் *மரபுவழியுத்தமாக மாறியது.*

## *சிங்கள தலைவர்களின் பங்கு*

*அமரர் யுனியஸ் றிச்சாட் ஜெயவட்டனா* தமிழருக்கு எதிரான சிங்கள தேசிய தலைவர்.1977 இனக்கலவரம்,இலங்கைக்கு உலகில் அபகீர்த்தியை கொடுத்த கொடிய1983 இனக்கலவரம் ஆகியவை அவரின் ஆட்சிக்காலத்தில்தான் நடைபெற்றன. அதனால் பல நாடுகள் எமது நாட்டின் விடயங்களில் தலையிடத்தொடங்கின. அவரின் இந்தியாவிற்கு எதிரான போக்கு இந்தியாவிற்கு ஆத்திரத்தை ஊட்டியது. தமிழர்களுக்கு உதவும் சாட்டில் இலங்கையை ஆக்கிரமிக்கப்பார்த்தது. ஜேஆர் புத்திசாலித்தனமாக தனது ஆணவப்போக்கை புறந்தள்ளிவிட்டு இந்தியபிரதமருடன் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். இந்திய அமைதிபடையுடன் புலிகளை மோதவிட்டார். அதனால் சிங்களமக்களும் நாடும் காப்பாற்றப்பட்டது. பல தமிழர்கள் கொல்லப்பட்டனர். பொருட்களும் அழிந்தன சிங்கள மக்கள் ஜேஆரின் புத்திசாலித்தனத்தின் செய்கைக்காக அவருக்கு நன்றியாக இருக்கவேண்டும். சிங்களம் மட்டும் சட்டம் பற்றி ஆரம்பித்தது ஜேஆர். அதை செய்வேன் என்று கூறி ஆட்சியைப்பிடித்து சட்டமூலமாக்கியது பண்டாரநாயக்கா.

ஜேஆர் குள்ள புத்தி உடையவர். 1977 தேர்தலுக்கு முன் அமிர்தலிங்கத்துடன் இரகசிய பேச்சு வார்த்தைகளை வைத்தார். அதற்கு பின் சண்டை என்றால் சண்டைக்கும் தயார், சமாதானம் என்றால் சமாதானத்திற்கும் தயார் என்று அமிருக்கு சவால் விட்டார். ஆனால் தனிப்பட்ட முறையில் அமிருக்கு உதவிகள் செய்து அமிரை தமிழீழ கொள்கையில் குத்துக்கரணம் போடச்செய்தார். அதன் காரணமாக அமிர் புலிகளுக்கு பலியானார். முன்பு ஒரு நாள் பாராளுமன்றத்தில் ஒரு சிங்கள உறுப்பினர் அமிர் ஒரு 'பிறாங்கஸ்ரின்' பூதத்தை உருவாக்கிறார், அது ஈற்றில் அவரைத்தின்னுமென்றார். அது உண்மையாகிவிட்டது.

ஜனாதிபதி பிரேமதாசா இந்திய அமைதி படையினரால் பெருமளவில் புலிகள் அழிக்கப்பட்டபோது, அவர்களுக்கு புத்துயிர் அளித்து அமைதிப்படையினருடன் போராட உதவிசெய்தார். அதனால் தமிழருக்கு பெரும் உயிரிழப்புகளும் பொருட்சேதங்களும் கற்பழிப்புகளும் ஏற்படுமென்று தெரிந்து செய்தார். ஈற்றில் கடவுள் தண்டனையாக அவர்களுக்கே அவர்பலியானார். அவரின் காலத்தில் தெற்கிலும் பலர் கொலையுண்டனர்.

1958-ம் ஆண்டு காடையர்கள் தெற்கில் தலையை மணந்து பார்த்து தலையில் நல்லெண்ணை மணத்தால் தாக்கினார்கள். அதனால் தமிழர்கள் தேங்காய் எண்ணை வைத்து கையில் சிங்கள புத்தகத்தைகொண்டு திரிந்தார்கள். அதன் பிரதிபலன் போல் 1971-ம் ஆண்டு சிங்கள இளைஞர்கள் ஜேவிபி சந்தேக நபர்கள் என்று கைது செய்யப்படாமல் தப்பவதற்காக நல்லெண்ணை வைத்து தமிழ் புத்தகங்களை கொண்டுதிரிந்தார்கள்.

முன்னை நாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா வெளிநாட்டுக்கொள்கையிலும், உறவுகளிலும் நிதானமாகவிருந்தார். அவர் வகுப்புவாதியாகவிருக்கவில்லை.

வீட்டின் கமக்காரர்கள் பணக்காரர் ஆவதற்கு காரணமாகவிருந்தார். யாழ்ப்பாணத்திற்கு தமிழரசுக்கட்சி.தமிழ்ஐக்கிய விடுதலைமுன்னணியின் எதிர்ப்புக்கு மத்தியிலும் ஒரு பல்கலைக்கழகத்தை அமைத்துக்கொடுத்தார். சிங்கள தமிழ் மக்களிடையே ஒற்றுமை ஏற்படவேணடுமென விரும்பினார்.அவரின் கீழ் மந்திரியாக இருந்தவர் தமிழ் மக்கள் கப்பல் மூலம் இலங்கைக்கு வந்தவர்கள் என்று சொன்னதைக்கேள்விப்பட்டு அவரை தொலைபேசி மூலமழைத்து இன ஒற்றுமைக்காக தான் முயற்சி எடுக்கும்போது மந்திரி எதிர்மாறாக நடப்பதாகச்சொல்லி அவரை ஏசினார். மீண்டும் அவர் அப்படி நடந்தால் மந்திரி சபையிருந்து நீக்கி விடப்போவதாக எச்சரித்தார். அச்சம்பவம் பற்றி அந்நேரம் அங்கிருந்த ஒருவர் எனக்குச்சொன்னார்.

ஜனாதிபதி சந்திரிகா இன ஒற்றுமைக்காகவும் இனக்கலவரங்களால் நாட்டிற்கு ஏற்பட்ட இழிவான பெயரை துடைக்கவும் அரும்பாடுபட்டார். 1995-ம் ஆண்டு வைகாசி மாதம் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் பேச்சுவார்த்தை தோல்வியடைந்து போர் ஆரம்பமாகியது. 5மாதத்தில் சந்திரிகா புலிகளை யாழ்பாணத்தைவிட்டு வெளியேறச்செய்தார்.

மாவிலாறு நீரை தடைசெய்ததால் பேச்சுகள் பயனற்ற நிலையில் மனிதாபிமான போரென ஜனாதிபதி மகிந்தாவினால் ஆரம்பிக்கப்பட்ட போர் சொல்லொனா துன்பங்களுடனும், சேதங்களுடனும் ஆயிரக்கான உயிரிழப்புகளுடனும் 2009 வைகாசி மாதம் முடிவடைந்தது.

ஜனாதிபதி மகிந்தா உண்மையான தேசப்பற்றுடையதுணிவான இலங்கைத்தலைவராவர். அவர் இங்கு வாழும் எல்லா இனமக்களுக்கும் இலங்கை சொந்தநாடு, எல்லோரும் இலங்கையர்கள், எவ்விடத்திலும் வாழலாம், எல்லோருக்கும்

சம உரிமை உண்டு, சிங்களமும் தமிழும் உத்தியோக மொழிகள், மத பேதம் இல்லை, என்று எப்போதும் எவ்விடத்திலும் சொல்லுகிறார்.இலங்கையை உலகில் உதாரணமாக கூறக்கூடிய சமாதானமான நாடாக மாற்ற இறைவன் அவரை ஆசீர்வதிக்க வேண்டும்.

## மீள்வாழ்வு

யுத்தம் முடிந்த 2,3 நாட்களின் பின் பலாலி விமான நிலைய தேநீர்சாலையில் சில ஐநா அதிகாரிகளுடன் கதைக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. சில கிழமைகள் கழிந்தபின் ஏ9 பாதையால் பிரயாணம் செய்யக்கூடியதாக இருக்கும் என்று சொன்னேன். அவர்கள் ஆச்சரியத்துடன் என்னைப்பார்த்து அதற்கு இரண்டு வருடங்களுக்கு மேலாகுமென்று சொன்னார்கள். அவர்கள் கூறியதிலிருந்து யுத்தத்தின் பின் எமது நாடு சர்வதேசகணிப்பின் தரத்தோடு ஒப்பிடும்போது வேகமாக மீளமைக்கப்படுகின்றது என்பது தெரிகின்றது. மீளவாழ்விற்கு வேலையற்ற பட்டதாரிகளை வேலைக்கமர்த்தி கிராமந்தோறும் குடும்ப விபரங்களை கணனியில் பதிவு செய்து மனிதாப அடிப்படையில் நேர்மையாக உதவிகளை செய்யவேண்டும். புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் வேலை செய்த அரசஉத்தியோகத்தர்கள் அரசசொத்துக்களையும் மக்களுக்குரியவற்றைகளையும் முறையற்றவிதமாக பகிர்ந்தவர்களிடம் நியாயத்தை எதிர்பார்க்கமுடியாது.

வடக்கு மக்களுக்கு மேயர் ஜெனரல் சந்திரசிறி ஆளுநராக இருப்பது ஒரு வரப்பிரசாதமாக உள்ளது.அவர் இராணுவதளபதியாக வடக்கில் பல குற்ற செயல்களை கட்டுப்படுத்தினார். இப்பொழுது ஆளுனராக மக்களுடன் ஒரு ஜனநாயக தலைவராக செயற்பட்டு மந்திரி டக்ளஸ் தேவானந்தாவுடன ஒத்துழைத்து சேவைசெய்கின்றார்.

அரசியல் சார்பற்ற யாழ்ப்பாண மக்கள் இராணுவம் தமக்கு உதவிசெய்வதாகவே கூறுகின்றனர். சர்வதேச சமாதானப்பரிசு பெற்ற யாழ்ப்பாண கட்டளையிடும் இராணுவதளபதி மேஜர் ஜெனரல் கத்துருசிங்காவிற்கு எனது வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.எமது மக்களை அழிவுப்பாதைக்கு கூட்டிச்சென்ற தமிழ் அரசியல் கட்சிகள் ஜனநாயகம் இராணுவச்சட்டம் என்றெல்லாம் அலட்டிக்கொள்கிறார்கள். அதிகார ஆசைகொண்ட அரசியல்வாதிகளும் அவர்களை கண்மூடித்தனமாக ஆதரிப்பவர்களும் தங்கள் போக்கை மாற்றும் மட்டும் எங்களுக்கு ஜனநாயகம் பற்றிய அக்கறையைவிட எமது அடுத்த சந்ததியினர் காப்பாற்றப்பட்டு அவர்களுக்கு ஒரு அமைதியான கௌரவமான வாழ்க்கை கிடைக்கவேண்டுமென்பதே எங்களுக்கு முக்கியம்.

## தேசிய ஒற்றுமையும் நல்லிணக்கமும்

**தேசிய ஒற்றுமையும் நல்லிணக்கமும் மகிந்த சிந்தனையின் கூற்றின்படி ஒருநாடு ஒரு தேசம் எல்லோரும் சமஉரிமையுள்ள இலங்கையர்கள். சிங்களமும் தமிழும் இலங்கை மக்களின் மொழிகள். சிங்களமும் தமிழும் இலங்கையின் அரசாங்க மொழிகள். இந்தக்கூற்றை அரசியல் அமைப்பில் ஒருபோதும் யாராலும் மாற்றமுடியாதபடி அமைக்கவேண்டும்.** இதுவே எமது நாட்டின் ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்கும் பிரச்சனையற்ற வாழ்வுக்கும் உள்ள ஒரே ஒரு தீர்வு.

தமிழ் அரசியல் கட்சிகளும் தலைவர்களும் தமக்கு அதிகாரத்தையே கேட்கிறார்கள். தமிழ் மக்களையும் ஒரு பிரதேசத்தையும் ஆள்வதற்கு ஆசைப்படுகிறார்கள் அவர்கள் பெரிய பிரதேசத்தை ஆளும் ஆசையில் வடக்கையும் கிழக்கையும் இணைக்க கோருகிறார்கள் அப்படி இணைக்கும் போது வடக்கு தலைவர்கள் கிழக்கை அடக்கி ஆள்வதற்கு முயற்சிக்கிறார்கள் . தமிழரசுக்கட்சி கிழக்கின்

தமிழரசுத்தலைவர் இராசதுரையை ஓரங்கட்டியதை நாம் மறக்க முடியாது. எங்களுக்கு 60 வருடங்களாக எட்டாத அமைதியான சமாதான வாழ்க்கையும் ஏனைய பகுதிகளைப்போன்ற வசதியான வாழ்க்கையும் கிடைக்க வேண்டும்.

ஜனநாயகசோசலிச இலங்கைக்குடியரசின் ஜனாதிபதி இலங்கையின் எல்லாப்பகுதிகளுக்கும் ஜனாதிபதி ஆவார். அப்பகுதி மக்களின் பாதுகாப்பிற்கும் நல்வாழ்விற்கும் அவரே பொறுப்பு. புலிகளிடமிருந்து தமிழ் மக்களை காப்பாற்றி விட்டேன் என்று கூறும் ஜனாதிபதி புலிகளின் பேச்சாளர்களாக இருந்தவர்களிடமிருந்தும் மக்களைக்காப்பாற்ற வேண்டும். இல்லாவிடின் அவர்கள் மீண்டும் மக்களை அழிவப்பாதைக்க இட்டுச்செல்வார்கள்.

ஜனாதிபதி ஐநா சபையிலே "பழையதை மறப்போம், நாட்டை கட்டி எழுப்ப புது பாதையில் செல்வோம்" என்றார். ஆனால் தமிழரசியல்வாதிகள் பழையவற்றைத்தான் மும்மரமாக நினைவுபடுத்திக்கொண்டிருக்கின்றனர். நாம் எமது அடுத்த சந்ததியினரை தரித்திரவாழ்க்கைக்கு தள்ளாமல் பாதுகாக்க வேண்டும்.பயங்கரவாதம் சத்திரசிகிச்சை செய்து வெற்றிகரமாக எடுக்கப்பட்ட கட்டி என்றால் அதிலிருந்து பரவியுள்ள வேறு பகுதிகளுக்கும் தகுந்தசிகிச்சை செய்தாற்றான் மீண்டும் வருத்தம் வராமல் உயிர் பிழைக்கமுடியும்.

வகுப்புவாதமாகவும் எங்கள் நாட்டிற்கு அபகீர்த்தியாகவும் பேசுபவர்களை தண்டிக்கவேண்டும். சட்டம் எல்லோருக்கும் சமம். பிரபாகரன் தங்கள் தலைவன் என்று கூறிய அரசியல்வாதிகளுக்கு பாதுகாப்பும் பல சலுகைகளும் செய்யப்படுகின்றது ஆனால் ஆதரவளித்தார்களென்று சந்தேகப்படும் பலர் சிறையில் இருக்கிறார்கள். இது நீதியா?